## சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு நகராட்சி ஆணையர் சார்நிலைப் பணி – நகராட்சி நிர்வாக இயக்குநரக தேர்வுநிலை கண்காணிப்பாளர்கள், திரு M. சந்திரசேகரன் மற்றும் திரு N. ஹுசைன் பருக் மன்னர் – இரண்டாம்நிலை நகராட்சி ஆணையர்களாக பணி மாறுதல் மூலம் நியமனம் செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.1) துறை

**அரசாணை (நிலை) எண்.136** **நாள்:21.07.2010.**

படிக்க:

1. அரசு கடிதம் (நிலை) எண்.107, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.1) துறை, நாள் 07.06.2010.
2. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம் எண்.1920/2007/சி1, நாள் 07.07.2010.

----

**ஆணை:–**

முதலாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், 2009–2010 ஆம் ஆண்டு இரண்டாம்நிலை நகராட்சி ஆணையர் பணிக்கான காலிப் பணியிட மதிப்பீட்டின்படி கண்காணிப்பாளர்களுக்கு 3 பணியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும், இதில் அரசாணை (நிலை) எண்.165, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.1) துறை, நாள் 17.09.2009–ல் அவ்வலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணிபுரிந்த திரு S. நெடுஞ்செழியன் என்பவர், இரண்டாம்நிலை நகராட்சி ஆணையராக பணியமர்த்தப்பட்டார் எனவும், அரசாணை (பத்தாண்டு) எண்.169, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.1) துறை, நாள் 09.04.2010–ல் அவருடைய பணிமூப்பு அவருக்கு பணியில் இளையவரான திரு R. சுப்பிரமணியம் என்பவருக்கு இணையாக 2007–2008 ஆம் ஆண்டு நகராட்சி ஆணையர், நிலை 2 பணிமூப்பு பட்டியலில் நிர்ணயம் செய்து ஆணைகள் வெளியிடப்பட்டது என நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநர் தமது கடிதத்தில், திரு S. நெடுஞ்செழியன் அவர்களின் பணிமூப்பு 2007–2008 ஆண்டு பணிமூப்பு பட்டியலில் நிர்ணயம் செய்யப்பட்டதால் 2009–2010 ஆம் ஆண்டு நகராட்சி ஆணையர் நிலை 2 காலிப்பணியிட மதிப்பீட்டில் கண்காணிப்பாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மூன்று பணியிடங்களையும் தற்போது நிரப்பலாம் எனத் தெரிவித்து, அவ்வலுவலகத்தில் தேர்வுநிலை கண்காணிப்பாளர்களாக பணிபுரியும் கீழ்கண்ட மூன்று நபர்களின் பணிக் குறிப்புகளை அரசுக்கு அனுப்பி இம்மூவரும் நிலை 2 நகராட்சி ஆணையர்களாக பணி நியமனம் செய்ய தகுதியுடையவர் எனத் தெரிவித்துள்ளார்.

1. திரு M. சந்திரசேகரன், கண்காணிப்பாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம்.
2. திரு N. ஹுசைன் பருக் மன்னர், கண்காணிப்பாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம்.
3. திரு R. இசக்கியப்பன், கண்காணிப்பாளர், மதுரை மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநரகம்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக பரிசீலனை செய்தது. பரிசீலனைக்குப்பின், 2009–2010 ஆம் ஆண்டு நகராட்சி ஆணையர் நிலை 2 பணிக்கு கண்காணிப்பாளர்களுக்கு என ஒதுக்கீடு செய்யப்பட்ட மூன்று பணியிடங்களில் காலியிட மதிப்பீட்டின்படி ஏற்கனவே ஒருவரை பணிநியமனம் செய்யப்பட்ட நிலையில் தற்போது இரண்டு பணியிடங்களைத்தான் காலி பணியிடம் எனக் கருதலாம் என முடிவு செய்து திரு M. சந்திரகேரன் மற்றும் திரு N. ஹுசைன் பருக் மன்னர் ஆகியோரை தமிழ்நாடு நகராட்சி ஆணையர் சார்நிலைப் பணி விதிகளில் உள்ள விதி எண்.2(c)(iii)–ன்படி இரண்டாம்நிலை நகராட்சி ஆணையர்களாக மாற்றுப்பணியில் பணியமர்த்தலாம் என அரசு ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**க. அஷோக் வர்தன் ஷெட்டி**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை – 600 005.
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை – 600 002.
திரு M. சந்திரசேகரன் மற்றும் திரு N. ஹுசைன் பருக் மன்னர், தேர்வுநிலை கண்காணிப்பாளர்கள், நகராட்சி நிர்வாக இயக்குநரகம் (நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை – 5 வழியாக).
மாநில கணக்காயர், சென்னை – 600 018.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, குறளகம், சென்னை – 600 108.
இயக்குநர், தமிழ்நாடு நகரவியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் – 641 011.
நகல்:– அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் முதன்மைச் செயலர் அவர்களின் தனிச் செயலர், சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந மு.2) துறை, சென்னை – 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.